

பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம்

பல்லாலகுப்பம் ஊராட்சி / கிராமம்

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு வட்டம் / ஊராட்சி ஒன்றியம், பல்லாலகுப்பம் ஊராட்சி / கிராமம், சர்வே எண்கள்: 1/1பி மற்றும் 1/2எ2–ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1 : 400

கோப்பு எண் : 1597 / 2020 வே.மா.3

குறிப்பு :

மனைப்பிரிவின் பரப்பு : 12150.00 ச.மீ. (அ) 3.00 ஏக்கர்

கோரிய மனைகள் : 32

ஒதுக்கிய மனைகள் : 62

மனைப்பிரிவின் எல்லை :

நிலையிலுள்ள சாலை :

விற்பனைக்குரியவை :

கடை : 140.40 ச.மீ. - 1.16 %

EWS மனைகள் : 18

(மனை எண்கள். 6-17, 19-24) : 876.70 ச.மீ. - 10.87 %

பொது ஒதுக்கீடு :

உத்தேச சாலை :

மனைப்பிரிவின் பரப்பு : 12150.00 ச.மீ. (அ) 3.00 ஏக்கர்

மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகளின் பரப்பு : 4091.00 ச.மீ.

: மனைப்பிரிவின் மொத்த பரப்பு – உத்தேச சாலைகளின் பரப்பு

(12150.00 ச.மீ. – 4091.00 ச.மீ.) = 8059.00 ச.மீ.

ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பகுதி :

பூங்கா : 823.50 ச.மீ. - 10.21 %

பொது உபயோகம் (PP) : 64.00 ச.மீ. - 0.79 %

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பகுதி :

TANGEDCO ஒதுக்கீடு : 64.00 ச.மீ. - 0.79 %

உத்தேச சாலை	மூலை முடக்கு
7.20 மீ சாலைகளுக்கு	1.50 x 1.50 மீ.
9.00 மீ சாலைகளுக்கு	1.50 x 1.50 மீ.
10.00 மீ சாலைகளுக்கு	1.50 x 1.50 மீ.

நிபந்தனைகள் :

1. இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலகத்திற்கு அனுப்பப்படவில்லை என்றும் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. அரசாணை எண் : 71 ந.ஊ.வ.துறை நாள்: 16.06.2003–ன் படி சாலைகள் ஒதுக்கீட்டினை ஊராட்சிக்கு மனுதாரரால் தானமாக ஒப்படைப்பு செய்யப்படவேண்டும். மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு நில உரிமைக்கு ஊராட்சியே பொறுப்பு என்பதுடன் ஊராட்சியினால் வழங்கப்பட்ட நில உரிமை சான்றின் அடிப்படையிலேயே இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை – 2 அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றமின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'0" x 4'0" அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.
6. The Necessary Charges to be collected as per G.O. M.s. No. 79, Housing & Urban Development Department (UD4(3)), dt. 04.05.2017.
7. மனுதாரர் மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள், பூங்கா மற்றும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகளை வருவாய் உட்பிரிவு செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
8. மாவட்ட வன அலுவலர், வேலூர் வனக்கோட்டம் அவர்களின் தடையின்மை சான்று ந.க.எண். 10067/2019/வ1, நாள். 17.12.2019–ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

ம. வ. / மா. ந. ஊ. அ. (வே.மா.) எண் : 25 / 2021

இணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
வேலூர் மாவட்டம்.

மாவட்ட வன அலுவலர், வேலூர் வனக்கோட்டம் அவர்களின் நிபந்தனைகள் :

1. தடையில்லா சான்று வழங்கப்பட்டுள்ள இடத்தை சுற்றியுள்ள வனத்திற்கு எவ்வித ஊறும் விளைவிக்கக்கூடாது.
2. வனத்திற்கு வாழும் உயிரினங்களுக்கும் மற்றும் தாவரங்களுக்கு எவ்வித இடையூறுகளையும் ஏற்படுத்தக்கூடாது.
3. எளிதில் தீ பற்றக்கூடிய பொருட்கள் கண்டிப்பாக தடைசெய்யப்படுகிறது.

அளவர் / உதவி வரைவாளர்

வரைவாளர் நிலை – 3

மேற்பார்வையாளர்